DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.ராஜ்குமார் | Father/Husband Name : ஜெயராஜ் |
| Age : 38 | Village : உசிலம்பட்டி |
| Taluk : | Calling : சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10.07 .2026 (Accused present).

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது இராஜபாளையம் வடக்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்

2. நான் இருக்கன்குடி சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 06.08.2023 ம் தேதி 24.00 மணிக்கு நிலைய சரகம் ரோந்து அலுவலில் இருந்த போது இருக்கன்குடி காவல் நிலையத்திலிருந்து கிடைத்த தகவலை பெற்று சாத்தூர் மருத்துவமனை சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த நத்தத்துப்பட்டி முதல் தெருவை சேர்ந்த சின்ன வாழவந்தாள் மனைவி மாரியம்மாள் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்றுக் 12.00 மணிக்கு நிலையம் வந்து புகார் மனுவின் தன்மை கேற்ப நிலைய குற்ற எண் 82/2023 பிரிவுகள் 294(b), 323, 506(2) இ.த.ச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் மனுவை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(புகார் மனு அ.சா.ஆ. 3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**.

3. பின்னர் 07.08.2023 ம் தேதி 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகாலிங்கம் மற்றும் குலசேகரபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பின்னர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ 5 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ. 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**.

4. பின்னர் சாட்சிகள் மாரியம்மாள், கிருஷ்ணமூர்த்தி, முனியாண்டி, சுந்தர்ராஜ், ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் இருப்பு ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் முன் பிணையில் சென்றுள்ளதை தெரிந்து கொண்டேன்.

6. இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சை அளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சிவக்குமார் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றை பெற்று அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன். **(சாத்தூர் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. பின்பு இத்துடன் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, 506(2) ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

8. பொய்யான புகார் மனு பெற்று, எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

10 Jul 2026

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P